# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 2-8 - திரிபுரம்
## (திரு அட்டபுயகரம்)

1118 * திரிபுரம் மூன்று எரித்தானும் * மற்றை மலர் மிசை மேல் அயனும் வியப்ப *
முரி திரை மாகடல் போல் முழங்கி * மூவுலகும் முறையால் வணங்க **
எரியன கேசர வாள் எயிற்றோடு * இரணியன் ஆகம் இரண்டு கூறா *
அரி உருவாம் இவரார் கொல்? என்ன * அட்டபுயகரத்தேன் என்றாரே 1

1119 வெந்திறல் வீரரில் வீரர் ஒப்பார் * வேதம் உரைத்து இமையோர் வணங்கும் *
செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும் * தேவர் இவர் கொல்? தெரிக்க - மாட்டேன் **
வந்து குறள் உருவாய் நிமிர்ந்து * மாவலி வேள்வியில் மண் அளந்த *
அந்தணர் போன்று இவரார் கொல்? என்ன * அட்டபுயகரத்தேன் - என்றாரே 2

1120 செம்பொன் இலங்கு வலங்கை வாளி * திண் சிலை தண்டொடு சங்கம் - ஒள் வாள் *
உம்பர் இருசுடர் ஆழியோடு * கேடகம் ஒண்மலர் பற்றி எற்றே! **
வெம்பு சினத்து அடல் வேழம் வீழ * வெண்மருப்பொன்று பறித்து * இருண்ட
அம்புதம் போன்று இவரார் கொல்? என்ன * அட்டபுயகரத்தேன் - என்றாரே 3

1121 மஞ்சுயர் மாமணிக் குன்றம் ஏந்தி * மாமழை காத்து ஒரு மாயவானை
அஞ்ச * அதன் மருப்பு அன்று[1] வாங்கும் * ஆயர் கொல்? மாயம் அறிய - மாட்டேன் **
வெஞ்சுடர் ஆழியும் சங்கும் ஏந்தி * வேதம் முன் ஓதுவர் நீதி வானத்து *
அஞ்சுடர் போன்று இவரார் கொல்? என்ன * அட்டபுயகரத்தேன் - என்றாரே 4

1122 கலைகளும் வேதமும் நீதி நூலும் * கற்பமும் சொற்பொருள் தானும் * மற்றை
நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் * நீர்மையினால் அருள் செய்து ** - நீண்ட
மலைகளும் மாமணியும் * மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற *
அலைகடல் போன்று இவரார் கொல்? என்ன * அட்டபுயகரத்தேன் - என்றாரே 5

1123 எங்ஙனும் நாம் இவர் வண்ணம் எண்ணில் * ஏதும் அறிகிலம் ஏந்திழையார் *
சங்கும் மனமும் நிறைவும் எல்லாம் * தம் மனவாகப் புகுந்து ** தாமும்
பொங்கு கருங்கடல் பூவை காயா * போதவிழ் நீலம் புனைந்த மேகம் *
அங்ஙனம் போன்று இவரார் கொல்? என்ன * அட்டபுயகரத்தேன் -

[1] பொன்று

என்றாரே 6

1124 முழுசி வண்டாடிய தண் துழாயின் * மொய்ம்மலர்க் கண்ணியும் மேனி * - அஞ்சாந்
திமுசிய கோலம் இருந்தவாறும் * எங்ஙனம் சொல்லுகேன்? ஓவி நல்லார் **
எழுதிய தாமரை அன்ன கண்ணும் * ஏந்தெழில் ஆகமும் தோளும் வாயும் *
அழகியதாம் இவரார் கொல்? என்ன * அட்டபுயகரத்தேன் என்றாரே 7

1125 மேவி எப்பாலும் விண்ணோர் வணங்க * வேதம் உரைப்பர் முந்நீர் மடந்தை
தேவி * அப்பால் அதிர் சங்கம் இப்பால் சக்கரம் * மற்றிவர் வண்ணம் – எண்ணில் **
காவி ஒப்பார் கடலேயும் ஒப்பார் * கண்ணும் வடிவும் நெடியராய் * என்
ஆவி ஒப்பார் இவரார் கொல்? என்ன * அட்டபுயகரத்தேன் என்றாரே 8

1126 தஞ்சம் இவர்க்கு என் வளையும் நில்லா * நெஞ்சமும் தம்மதே சிந்தித்தேற்கு *
வஞ்சி மருங்குல் நெருங்க நோக்கி * வாய் திறந்து ஒன்று பணித்தது – உண்டு **
நஞ்சமுடைத்து இவர் நோக்கும் நோக்கம் * நான் இவர் தம்மை அறிய – மாட்டேன் *
அஞ்சுவன் மற்று இவரார் கொல்? என்ன * அட்டபுயகரத்தேன் - என்றாரே 9

1127 * மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும் * நீள்முடி மாலை வயிர - மேகன் *
தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி * அட்டபுயகரத்து ஆதி தன்னை **
கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன் * காமருசீர்க் கலிகன்றி * குன்றா
இன்னிசையால் சொன்ன செஞ்சொல் மாலை * ஏத்த வல்லார்க்கு இடம் - வைகுந்தமே 10

**அடிவரவு:** திரிபுரம் வெந்திறல் செம்பொன் மஞ்சு கலைகளும் எங்ஙனும் முழுசி மேவி தஞ்சம் மன்னவன் சொல்லு